## காயல்பட்டணம் நகராட்சியின் 13.09.2021ம் தேதிய அவசரக்கூட்டம்

**மன்றப்பொருள்: 1**

காயல்பட்டணம் நகராட்சியில் உள்ள அனைத்து வகையான தெருவிளக்குகளையும் மின் கட்டணத்தினை குறைத்திடும் நோக்கத்தில் LED விளக்குகளாக (Emission Diode Lamps) மாற்றிட விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பித்திட நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் கடித நக.எண். 35871/2014/E1 நாள். 08.09.2021ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளதின்படி நகராட்சியில் உள்ள 1629 எண்ணம் தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றுவதற்கு ரூ.125.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீட்டினை நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண். 2141 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்
காயல்பட்டணம் நகராட்சி

**காயல்பட்டணம் நகராட்சியின் செப்டம்பர் 2021 ம் மாத நகர்மன்ற சாதாரணக் கூட்டம்**

மன்றப்பொருள்: 1

**15th CFC Tied Grant – (IInd Installment) 2020-2021** - ன் கீழ் காயல்பட்டணம் நகராட்சிக்கு ரூ. 57,73,206/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகளை தேர்வு செய்து சமர்ப்பித்திட தெரிவிக்கப்பட்டதின்படி கீழ்க்கண்டவாறு பணிகள் தேர்வு செய்ய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் இரத்தினாபுரி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வளாகங்களில் பேவர் பிளாக்கல் பதித்தல் | 5.80 |
| 2 | காயல்பட்டணம் நகராட்சி கடையக்குடி உரக்கிடங்கு இடத்தில் கூடுதலாக புதிய செட் அமைத்தல் | 10.00 |
| 3 | காயல்பட்டணம் நகராட்சிக்கான ஸ்ரீவைகுண்டம் பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்றும் நிலையத்தில் தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டி அருகில் பேவர் பிளாக்கல் பதித்தல் | 10.00 |
| 4 | காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான உச்சிமகாளியம்மன் கோவில் தெரு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி,காயிதேமில்லத் நகர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் அருணாச்சலபுரம் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வளாகங்களில் பேவர் பிளாக்கல் பதித்தல் | 7.50 |
| 5 | காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான மாட்டுக்குளம் (ரெட் ஸ்டார் சங்கம்) மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வளாகத்தில் பேவர் பிளாக்கல் பதித்தல் | 10.00 |
| 6 | காயல்பட்டணம் நகராட்சி கடையக்குடி உரக்கிடங்கு இடத்தில் பேவர் பிளாக்கல் பதித்தல் | 4.50 |
| 7 | காயல்பட்டணம் நகராட்சிக்கான ஸ்ரீவைகுண்டம் பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்றும் நிலையத்தில் மோட்டார் அறை அருகில் பேவர் பிளாக்கல் பதித்தல் | 10.00 |
| | மொத்தம் | 57.80 |

மேற்கண்டவாறு உள்ள பணிகளை தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும் அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு போக கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண். 2142 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

**மன்றப்பொருள் : 2**

நகராட்சியில் குடிநீர் விநியோகப்பயன்பாட்டில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை தேவையான பணியாளர்கள் மற்றும் அதற்கான சுத்தம் செய்யும் பொருட்களை பயன்படுத்தி சுத்தம் செய்தல், நகராட்சிப்பகுதிகளில் உள்ள குடிநீர் பம்பிங் குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யப் பதிக்கப்பட்டுள்ள அனைத்து வகை குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை அதற்கான பணியாளர்கள் மற்றும் அதற்கு தேவையான பொருட்களை பயன்படுத்தி சீரமைத்தல், நகராட்சிப்பகுதிகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை

சரி செய்யும்பொழுது சிமெண்ட் சாலைகள் மற்றும் தார்சாலைகளில் ஏற்படும் பழுதுகளை அதற்கான பணியாளர்கள் மற்றும் தேவையான பொருட்களை பயன்படுத்தி சீரமைத்தல், தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள குடிநீர் பம்பிங் செய்யும் பணிகளை செய்திட மின்பணியாளர் (நிலை 2) ஒரு நபர் மற்றும் உதவியாளர் (மஸ்த்தூர் பணியாளர் நிலை 2) நான்கு நபர்களை நியமித்து பணி செய்தல், நகராட்சிப்பகுதிகளில் குடிநீர் விநியோகப்பணிகளை செய்திட உதவியாளர் (மஸ்த்தூர் பணியாளர் நிலை 2) ஐந்து நபர்கள் மற்றும் அவசர பணிகளுக்காக வாகன ஓட்டுநர் (ஹெவி) ஒரு நபரை நியமித்து பணி செய்தல், காயல்பட்டணம் நகராட்சியில் குடிநீர் கட்டணம் செலுத்தாத நபர்களின் குடிநீர் இணைப்பினை துண்டிப்பு செய்தல் பணிகள் ஆகியவற்றை ஒப்பந்த பணியின் மூலம் செய்திடவும் அதற்கான செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் நகர்மன்ற தீர்மானம் எண்.2017 நாள்.29.05.2020 ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு அதன்படி ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் பணி செய்திட திரு.டி.மாதவன், ஓடக்கரை ,காயல்பட்டணம் என்பவருக்கு 06.05.2020 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தற்பொழுது மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்ததாரரின் ஒப்பந்தக்காலம் மே 2021 அன்றுடன் முடிவடைகிறது. ஆனால் தற்பொழுது வரை தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை விலை விகிதப்பட்டியல் வெளியிடப்படாததால் மதிப்பீடு தயாரித்து மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.தற்பொழுது கொரோனா பெருந்தொற்று காரணமாக பொதுமக்களுக்கு சீரான மற்றும் பாதுகாப்பான முறையில் குடிநீர் வழங்கவேண்டிய நிலை உள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிகளுக்கான தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை விலை விகிதப்பட்டியல் 2021-2022 வரப்பெற்று அதன்படி மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்படும் வரை கூடுதலாக மூன்று மாதங்களுக்கு (செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் 2021) ஏற்கனவே பணி செய்து வரும் ஒப்பந்ததாரரான திரு.டி.மாதவன்,ஓடக்கரை, காயல்பட்டணம் என்பவருக்கு ஏற்கனவே நகர்மன்றத்தால் அங்கிகரிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் தொடர்ந்து பணிகள் செய்திட வேலை உத்திரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) குடிநீர் பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்றதையும் வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கிகரிக்கலாம்.

**தீர்மான எண். 2143 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

<u>மன்றப்பொருள் 3</u>

காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின்படி வீடு வீடாக சென்று அபேட் மருந்து தெளிப்பதற்கும் மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கையினை 40 தற்காலிக பணியாளர்களைக் கொண்டு, ஒப்பந்த அடிப்படையில் செய்திடவும், அதற்கான ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு அதன் நடைமுறைகள் முடிவுற்று பணிகள் தொடங்கப்படும் வரை உள்ள காலத்திற்கு, ஏற்கனவே இந்நகராட்சியில் திடக்கழிவு மேலான்மையில், உள்ள தனியார் துப்புரவு பணிகளை மேற்கொண்டு வருகின்ற மெஸ்ஸர்ஸ்.கே.ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன், நிறுவனம் மூலம் செய்திட மன்ற தீர்மானத்தின்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போழுது கேவிட்–19 தடப்பு நடவடிக்கை அவசர கால பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், ஒப்பந்த பணிகளுக்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுகிது. எனவே ஜீலை, ஆகஸ்ட், மாதங்களுக்கு ஆணையரின் முன்அனுமதியினை பெற்று ஏற்கனவே

உள்ளவாறு, ஊதியம் வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கவும், செப்டம்பர் மாதத்திற்கும் தற்போதைய நடவடிக்கைகளையும் மற்றும் அதற்கான செலவினங்களை பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மேற்கொண்டு தொடர அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண். 2144 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

ந.க.எண்.720/2014/அ1

## மன்றப்பொருள் 4

காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின்படி வீடு வீடாக சென்று அபேட் மருந்து தெளிப்பதற்கும் மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கையினை 40 தற்காலிக பணியாளர்களைக் கொண்டு, ஒப்பந்த அடிப்படையில் செய்திடவும், அதற்கான ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு அதன் நடைமுறைகள் முடிவுற்று பணிகள் தொடங்கப்படும் வரை உள்ள காலத்திற்கு, ஏற்கனவே இந்நகராட்சியில் திடக்கழிவு மேலான்மையில், உள்ள தனியார் துப்புரவு பணிகளை மேற்கொண்டு வருகின்ற மெஸ்ஸர்ஸ்.கே.ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன், நிறுவனம் மூலம் செய்திட மன்ற அனுதியின்படி, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தற்போழுது கேவிட்–19 தடப்பு நடவடிக்கை அவசர கால பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், ஒப்பந்த பணிகளுக்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுகிது. எனவே வருகின்ற 3 மாதங்களுக்கு ( அக்டோபர், நவம்பர், டிசம்பர்) தற்போதைய நடவடிக்கைகளை தொடரவும் மற்றும் அதற்கான செலவினங்களை பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மேற்கொண்டு தொடர அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண். 2145 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

ந.க.எண்.720/2014/அ1

## மன்றப்பொருள் 5

இந்நகராட்சி சார்பாக பசுமை தீர்ப்பாய வழக்கு விண்ணப்ப எண்கள் 11/2021 மற்றும் 12/2021 ஆகியவற்றின் சார்பாக பசுமை தீர்ப்பாயத்தில் ஆஜராகும் பொருட்டு, அவசர அவசியம் கருதி மேற்படி வழங்கறிஞர் கட்டணமாக தொகை முறையே 20,000/–, 20,000/– ஆக மொத்தம் ரூ.40,000/– யை நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.அப்துல் சலீம், சென்னை என்பவருக்கு (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) ஆணையர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கியதை மன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

**தீர்மான எண். 2146 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

ந.க.எண். 958/2016/அ4

## மன்றப்பொருள் 6

காயல்பட்டணம் தென்பாகம் கிராமம் புல எண். 89/2 ல் 0.03.0 ஹெக்.ஏர்ஸ் நிலமானது தனக்கு உரிய என்றும், அதற்கான சொத்துவரி விதிப்பு எண். 139/130717 னை நகராட்சியினால் ரத்து செய்யப்பட்டது தொடர்பாக திரு. பாண்டியன் த/பெ செல்லையா என்பவர் மதுரை கிளையில் (சென்னை உயர்நீதிமன்றம்) வழக்கு எண். WP (M.D) No.7725/2021 தொடர்ந்துள்ள வழக்கில் நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.எம்.ராஜராஜன், என்பவர் ஆஜராகின்ற வகைக்கு, அதற்கான வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) பொது நிதியில் இருந்து வழங்குவதற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண். 2147 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

ந.க.எண். 386/2021/அ1

## மன்றப்பொருள் 7

காயல்பட்டணம் நகராட்சியில் தற்காலிக பணியாளராக இருக்கும் திரு.செந்தில்குமார் என்பவர் மதுரை கிளையில் (சென்னை உயர்நீதிமன்றம்) வழக்கு எண். WP (M.D) No.58/2016 தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.எம்.ராஜராஜன், என்பவர் ஆஜராகின்ற வகைக்கு, அதற்கான வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) பொது நிதியில் இருந்து வழங்குவதற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண். 2148 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

ந.க.எண். 014/2016/அ1

## மன்றப்பொருள் 8

காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் இயங்கி வருகின்ற DCW என்ற நிறுவனம் தாமிரபரணி ஆற்றில் போர்வெல் குழாய் போட்டு குடிநீர் எடுப்பது தொடர்பாக திரு.சுப்பையா த/பெ பெருமாள் எனவரால் மதுரை கிளையில் (சென்னை உயர்நீதிமன்றம்) வழக்கு எண். WP (M.D) No.6468/2019š தொடராப்பட்ட வழக்கில் நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.எம்.ராஜராஜன், என்பவர் ஆஜராகின்ற வகைக்கு, அதற்கான வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) பொது நிதியில் இருந்து வழங்குவதற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண். 2149 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

ந.க.எண். 228/2019/அ2

மன்றப்பொருள் 9

மாவட்ட ஆட்சித்தலைவரின் உத்தரவு படி, உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெற்று வருகின்ற மற்றம் முடிவுற்ற பணிகள் குறித்த விபரத்தினை **2020**ஆம் ஆண்டு தொழில் மலரில் விளம்பரம் செய்யும் பொருட்டு, இந்நகராட்சியின் பணிகள் குறித்து தினத்தந்தி பத்திரிக்கையில் விளம்பரம் செய்யவும் அந்த வகைக்கு உத்தேச செலவு தொகையாக ரூ.**20,000/–**னை பொது நிதியி செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண். 2150 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

ந.க.எண். 1039/2020/இ1

மன்ற பொருள்:-10

காயல்பட்டினம் நகராட்சியின் மூன்றாண்டு குத்தகை இனத்தில் இயங்கி வரும் காயல்பட்டினம் நகராட்சி பேருந்து நிலைய கிணற்றில் தண்ணீர் எடுக்கும் உரிமம் மூன்றாண்டு 17.09.2021 வுடன் முடிவுற்ற நிலையில், குத்தகைதாரரின் விண்ணப்பத்தின் படியும் மறுஏலம் ஏனைய அனைத்து குத்தகை இனங்களையும் ஒரே நாட்களில் ஏலத்தில் வைப்பதற்க்கும் நிர்வாக நலன் கருதி, மேற்படி குத்தகை இனத்தினை 18.09.2021 முதல் 31.12.2021 வரையிலான 104 நாட்களுக்கு உரிமத்தினை நீட்டித்து வழங்கிடவும், அதற்கான கூடுதல் 104 நாட்களுக்கான குத்தகை தொகையினை முந்தைய குத்தகை தொகையில் கணக்கீடு செய்திடவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு,

**தீர்மான எண். 2151 மன்றம் அனுமதிக்கப்படுகிறது**.
**ந.க.எண்:706/2015/அ2.**

மன்றப்பொருள் 11

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் அறிவுரைபடியும், நகராட்சி உள்ளாட்சி தேர்தலினை முன்னிட்டும் அவசர அவசியம் கருதி காயல்பட்டிணம் நகராட்சிக்கு உள்ளாட்சி தேர்தல் நடவடிக்கைக்காக ஆகும் உத்தேச செலவு தொகையாக ரூ.**50,00,000/–**னை (ஐம்பது இலட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண். 2152 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

ந.க.எண். 450/2016/அ2

மன்ற பொருள்:-12

திருநெல்வேலி .நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்-1846/**2021**/அ2 நாள்:**29.07.2021** ன்படி காயல்பட்டினம் நகராட்சியில் பணிபுரிந்து பணியிடை காலத்தில் **12.01.2017** அன்று இயற்கை எய்திய திரு.எஸ்.மூக்காண்டி என்பவரின் வாரிசுதாரர் திரு.மூ.முத்துராஜ் என்பவருக்கு கருணை அடிப்படையில் காயல்பட்டினம் நகராட்சி அலுவலகத்தில் காலியாக உள்ள தூய்மைபணியாளர் பணியிடத்தில் விதிமுறைகளின்படி நியமனம் செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.அதன்படி காயல்பட்டினம் நகராட்சியில் காலியாக உள்ள தூய்மை பணியாளர் காலிப்பணியிடத்தில் **PB-1A Rs.4800-10000** என்ற

ஊதிய விகிதத்தில் திரு.மூ.முத்துராஜ் என்பவரை நியமனம் செய்வதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.
(ந.க.எண்-1173/2020/அ1)

**அலுவவகககுறிப்பு**

தூய்மை பணியாளர் பணியிடத்திற்கான தகுதிகள் அனைத்தையும் திரு.மூ.முத்துராஜ் என்பவர் பெற்றுள்ளபடியால் தனியரை இந்நகராட்சி தூய்மை பணியாளர் பணியிடத்தில் **PB-1A Rs.4800-10000** என்ற ஏற்ற முறை ஊதிய நிரக்கில் நியமனம் செய்ய நியமனக்குழுவில் ஒப்புதல் பெற்று அன்னாரை நியமனம் செய்யலாம்.

**தீர்மான எண். 2153 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

**தனிஅலுவலர் (ம) ஆணையாளர்,**
**காயல்பட்டினம் நகராட்சி.**